# உடன்பிறப்பே...

66

**நீரை.மகேந்திரன்**

# கீரை ஆ.தமிழ்ச்செல்வன்

## ‘புதுக்கோட்டை மாவட்டத்தின் புலிப்போத்து!’

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கீரை ஆ.தமிழ்ச்செல்வன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



1986-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்பை எதிர்த்து, அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தினை அறிவித்தது கழகம். புதுக்கோட்டை மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட 163 கழகத்தினர், 58 நாட்கள் சிறைவாசத்துக்குப் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

“அரசியல் சட்ட நகலைக் கொளுத்தியது தேசிய அவமதிப்பு அல்ல; தி.மு.கவினர் முறையாக அறிவித்து, தங்கள் தாய்மொழிக்காகப் போராட்டம் நடத்தியுள்ளனர். இது திடீரென நடத்திய போராட்டம் அல்ல, அதனால், அவர்களை விடுதலை செய்கிறேன்” என்றார், மாவட்ட நீதிமன்றத் தலைமை நீதிபதி. அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை முரசொலியின் முதல் பக்கத்தில், மாவட்டத் துணைச் செயலாளர் கீரை.ஆ.தமிழ்ச்செல்வன் படத்துடன் வெளியிட்டார், கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அந்த தமிழ்ச்செல்வன், அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில், பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டம் உள்ளிட்ட சோழ மண்டலத்தில், கழகத்தின் மூத்த முன்னோடி. கொள்கை அடையாளங்களில் ஒருவராகத் திகழ்ந்த தியாகச்சுடர்.

புதுக்கோட்டை மாவட்டம். கீரனூரைச் சேர்ந்தவர் என்பதன் சுருக்கம்தான் ‘கீரை’ என்ற சொல். பெற்றோர் ஆரோக்கியசாமி - அந்தோணியம்மாள். 1936-ஆம் ஆண்டு ஜனவரி 7-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் முதலில் வைத்த பெயர் சின்னப்பன் என்கிற அருள்தாசன். அந்த அருள்தாசனே பின் நாட்களில் தமிழ்ச்செல்வன் என்று பெயர் மாற்றிக் கொண்டார்.

### தேவாலயத்தில் கலகம்

தீவிர இறை நம்பிக்கை கொண்ட குடும்பத்தில் பிறந்த அருள்தாசன், தேவாலயத்தில் நிலவிய சாதியப் பாகுபாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததுதான் அவரது முதல் கலகம். “கடவுள் அன்பைப் போதிக்கிறார் எனில், தேவாலயத்தில் பட்டியல் இனத்தவர்க்கும் பிறசாதியினருக்கும் ஏன் தனித்தனி இருக்கைகள்?”என பாதிரியாரிடம் கேள்வி எழுப்புகிறார். கேள்வி கேட்டபோது, அருள்தாசன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த சிறுவன்.

கடவுள் பெயரால் நிகழும் அநீதிகளைக் கேள்வி கேட்க வேண்டும் என பட்டிதொட்டி எங்கும் பெரியார் உசுப்பி விட்ட நேரம். தந்தை பெரியாரின் கடவுள் மறுப்பு இந்து மதத்துக்கு மட்டுமே எதிரானது அல்ல, அது அனைத்து மத நம்பிக்கைகளையும் கேள்வி கேட்பது. அந்த அரசியல் புரிந்துகொண்டவராக எழுந்து நின்றார், அருள்தாசன். அப்படியாக அவர், பகுத்தறிவுப் பாதைக்குத் திரும்பி, திராவிடச் சிந்தனைகளில் திளைத்து, கிறித்துவ மத மூடநம்பிக்கைகளைக் கேள்வி கேட்கத் தொடங்கினார்.

விளைவு 1948-ஆம் ஆண்டு, கீரனூர், நாஞ்சூரில் திராவிடர் கழகத்தின் கொடி பறக்கத் தொடங்கியது.

திராவிடச் சிந்தனைகள் உருவாக்கிய தமிழ்ப் பற்று அவரை கீரனூர் கழக உயர்நிலைப் பள்ளியின் தமிழ் இலக்கிய மன்றத்துக்கும், மாணவர் மன்றத்துக்கும் தலைவராக உயர்த்தியது. தி.மு.கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் அலை அலையாக மாணவர்கள், அண்ணாவின் பின்னால் திரண்ட போது, கீரனூரில் இருந்தும் அருள்தாசன் உள்ளிட்ட இளைஞர்கள் ஈர்ப்பு கொண்டு இயங்கத் தொடங்கினர். அப்போதுதான், அருள்தாசன் எனும் தனது பெயரை, தமிழ்ச்செல்வன் என மாற்றிக்கொண்டு, அரசியல் பணிகளுக்கு ஆயத்தமானார்.

1950-ஆம் ஆண்டு திருச்சியில், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் கலந்து கொண்ட இந்தி எதிர்ப்பு அறப்போரின்போது, கீரனூரிலிருந்து தனது நண்பர்களுடன் முழக்கமிட்டவாறே நடந்தே சென்று கலந்து கொண்டுள்ளார். அண்ணா கலந்துகொண்ட நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக பள்ளிக்குச் செல்லாமல் அடிவாங்கிய கதைகளும் உள்ளன.

1953-ஆம் ஆண்டு லால்குடியில் நடைபெற்ற, திருச்சி மாவட்ட முதல் மாநாட்டுக்காக, கருப்புச் சட்டை அணிந்து சென்ற ஒன்பதாம் வகுப்புச் சிறுவன் தமிழ்ச்செல்வன், திருச்சி ரயில் நிலையத்தில் அம்மாநாட்டின் திறப்பாளர் மூவலூர் ராமாமிர்தம் அம்மையாரைச் சந்தித்த அரிய நிகழ்வு, அரசியல் ஊட்டும் நிகழ்வாக இருக்கிறது. அப்படியாக, கீரனூரில் 1954-ஆம் ஆண்டில், தி.மு.க மாணவர் கிளையை உருவாக்கிய முன்னோடி, கீரை. ஆ.தமிழ்ச்செல்வனாக உருவானார்.

கழகக் கிளைகளை அமைப்பதில் அவர் காட்டிய வேகம், 1959-ஆம் ஆண்டில் அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர்களுள் ஒருவராக உயர்த்தியது.

மாணவர் அமைப்பின் சார்பாக, அந்த ஆண்டு திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டின் செயலாளர்களில் ஒருவராக இருந்தவர் தமிழ்ச்செல்வன். அந்தக் காலகட்டத்தில் கழகத்தின் பொறுப்புகளில் ஊர்க்கிளைக்கு அடுத்து வட்டம்தான். அந்த வகையில், குளத்தூர் வட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி படித்த ஒரே முழுநேர கட்சித் தொண்டர் தமிழ்ச்செல்வன் ஒருவரே என்கின்றன, காலக் குறிப்புகள்.

விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் என கழகத்தின் தொடர் போராட்ட அறிவிப்புகளின் போதெல்லாம், கீரனூர் சுற்றுவட்டாரங்களில் மக்களை அணிதிரட்டிக் கொண்டிருப்பார் தமிழ்ச்செல்வன். குன்றாண்டார் கோயில், அன்னவாசல், விராலிமலை ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் அவர் கால் படாத ஊர்களே இல்லை.

### சிறையிலிருந்தே பெற்ற வெற்றி

1964- ஆம் ஆண்டில், நடந்த உள்ளாட்சித் தேர்தலில், அவரும் அவரது நண்பர்கள் ஏழு பேரும் சிறையில் இருந்தவாறே, கீரனூர் முதிர்நிலை ஊராட்சிக்குப் போட்டியிட்டு எட்டு பேரும் வெற்றிபெற்றனர். அவர்களில் ஏகமனதாக தமிழ்ச்செல்வன் ஊராட்சி மன்றத் தலைவராக சிறையில் இருந்தே தேர்வாகி இருக்கிறார். அப்போது, மலிவு விலைஅரிசி, மருத்துவம், பட்டியலின மக்களுக்கு மனைப்பட்டா ஆகிய கோரிக்கைகளுக்காக அரசுத் துறைகளுக்கு அழுத்தம் கொடுத்து, கழக வழிகாட்டலில் இயங்கினார்.

முதன்முதலில் கழகம் தமிழ்நாட்டை ஆள்வதற்கு அமர்ந்தபோது, அவர் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அதையடுத்து, முதலமைச்சர் அண்ணாவை அழைத்து வந்து பொதுக்கூட்டம், கால்நடை மருத்துவமனைக்கு அடிக்கல், குடிநீர்த் திட்டங்கள் ஆகியவற்றைத் தொடங்கினார்.

அண்ணா தலைமையில்தான் தனது திருமணம் நடைபெற வேண்டும் என விடாப்பிடியாக நின்றதுடன், 1967-ஆம் ஆண்டில், அண்ணாவுக்கு சற்று நேரம் கிடைத்த, ஆடி மாதத்தில் தேதி வாங்கி, சுயமரியாதைத் திருமணத்தை நடத்தியிருக்கிறார். 1968-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், பெரியாரை கீரனூர் அழைத்து வந்து, அண்ணா பிறந்தநாள் கொண்டாடியிருக்கிறார்.

### வெற்றியும் தோல்விகளும்

1977-ஆம் ஆண்டு குளத்தூர் தொகுதியின் வேட்பாளராக, தலைவர் கலைஞர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டவர். அந்தத் தேர்தலில் வெற்றிவாய்ப்பை இழந்தாலும், அடுத்தடுத்து, 1980 மற்றும் 1984-ஆம் ஆண்டுகளிலும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கும் வகையில், கலைஞரின் நெஞ்சில் இடம்பிடித்தார். அவர் நின்று வெற்றிபெறவில்லை என்றாலும், 1989-ஆம் ஆண்டில், மாவட்டத் தேர்தல் பணிக்குழுத் தலைவராக, மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் உள்பட 5 சட்டமன்ற உறுப்பினர்களை வெற்றிவாகை சூட வைக்கும் வகையில் அரும்பணியாற்றினார். 1996-ஆம் ஆண்டில் புதுகை மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தமிழ்ச்செல்வன்.

கழகத்தின் உறுப்பினர், வட்டப் பிரதிநிதி, மாவட்டப் பிரதிநிதி, ஒன்றியச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர் என தனது கடும் உழைப்பினால் இயக்கப் பணிகளில் ஒவ்வொரு நிலையாக உயர்ந்த தமிழ்ச்செல்வன், 1997, மார்ச் மாதம் 22-ஆம் தேதி திடீரென

**1997-ஆம் ஆண்டு, சேலம் சிறப்பு மாநாட்டில், திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சி அரங்குக்கு, தமிழ்ச்செல்வன் பெயரைச் சூட்டிப் பெருமை சேர்த்தார் கலைஞர்.**

உடல்நலக் குறைவு ஏற்பட்டு தனது உடலியக்கத்தை நிறுத்திக்கொண்டார்.

துக்கம் தாளாத முத்தமிழறிஞர் கலைஞர், முரசொலியில் கட்டம் கட்டி தனிச் செய்தியில் தனது துயரத்தைப் பகிர்ந்து கொண்டார். “புதுக்கோட்டை மாவட்டத்தின் புலிப்போத்து, கீரை.ஆ.தமிழ்ச்செல்வன் மறைந்தார் என்பது என் செவிகளில் வேலாகப் பாய்ந்து, இதயத்தை வேதனைத் தீயில் தூக்கி வீசிவிட்டது” என நீண்ட இரங்கல் எழுதியிருந்தார்.

அவர் நினைவைப் போற்றும் வகையில், 1997-ஆம் ஆண்டு, சேலம் சிறப்பு மாநாட்டில், திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சி அரங்குக்கு, தமிழ்ச்செல்வன் பெயரைச் சூட்டிப் பெருமை சேர்த்தார் கலைஞர். 2007-ஆம் ஆண்டில், புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைக்கூடத்தை அவர் பெயரில் திறந்து வைத்தார், இன்றைய கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்கள்.

ஒரே கட்சி, ஒரே கொள்கை, ஒரே தலைமை, ஒரே சின்னம், ஒரே கொடி என வாழ்ந்த கீரை.ஆ.தமிழ்ச்செல்வன் அவர்களின் சுயமரியாதைப் போராட்டம் கழகத்தினர் கற்றுக்கொள்ள வேண்டிய அரசியல் பாடம்.

**...துடிக்கும்**

## வீரன் அழகுமுத்துவும் தோழர் ஜீவாவும்

இந்திய விடுதலைப் போரில், ஆங்கிலப் படையை எதிர்த்து நின்ற தமிழ் மன்னன் மாவீரன் அழகுமுத்துவின் 314-வது பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்ட நிலையில், “பீரங்கியின் வாயில் கட்டிவைத்து சுட்டுத்தள்ளினால்? அக்கொடூரத்தைக் கற்பனையாவது செய்ய முடிகிறதா?” என தனது முகநூலில், அந்த வரலாற்றைப் பதிவு செய்துள்ளார் எழுத்தாளர் சூர்யா சேவியர்.

“தன் போர்வீரர்கள் 248 பேருடன் பீரங்கி வாயில் கட்டிவைத்து, ரத்தமும், சதையும் அம்மணல்வெளி எங்கும் சிதறிக் கிடக்க, கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டவர் மாவீரன் அழகுமுத்து.

எட்டயபுரம் மன்னனின் படைத்தளபதி நெல்லை கட்டாளங்குளம் வீரன் அழகுமுத்து (1710-1759). கான்சாஹிப்புக்கும் ஆங்கிலேயர்களுக்கும் கூட்டு இருந்த போது, எட்டப்ப நாயக்கர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். குருமலை துரை நாயக்கர் முடிசூட்டப்பட்டார். எட்டப்ப நாயக்கர் பெருநாழிக் காட்டுக்குள் ஓடித் தலைமறைவானார். எட்டயபுரம் நோக்கி படையெடுத்து வந்த, ஆங்கிலேயர்களுக்கும், வீரன் அழகுமுத்துக்கும் பெத்தநாயக்கனூர் கோட்டையில் பெரும் யுத்தம் நடந்தது.

யுத்தத்தின் இறுதியில், பெத்தநாயக்கனூர் கோட்டை சரிந்து வீழ்ந்தது. அழகுமுத்து ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். அதுவரை யாருக்கும் கொடுக்கப்படாத கொடூரமான தண்டனை, அவருக்குக் கொடுக்கப்பட்டது. பீரங்கி வாயில் அவரைக் கட்டிவைத்து சுட்டார்கள். எலும்பும், சதையுமாகத் தெறித்து, அந்த பூமியே ரத்தவெள்ளத்தில் மிதந்தது.

இப்படி ஒரு மாவீரன் இம்மண்ணில் வாழ்ந்தார் என்று முதன்முதலில் வெளிக்கொணர்ந்தவர் தோழர்.ஜீவானந்தம். பொதுஉடைமை இயக்கத்தின் இலக்கிய இதழாக வெளிவந்த ‘தாமரை’யில்தான் வீரன் அழகுமுத்து பற்றி முதலில் தோழர்.ஜீவா எழுதினார். அதன்பிறகே, அகிலம் அவரை அறிந்து கொண்டது.

வீரன் அழகுமுத்து அன்று எதற்காகப் போராடினாரோ, அதற்காகத்தான் இன்று பலரும் பா.ஜ.க.வுக்கு எதிராகப் போராடுகிறார்கள். பீரங்கி வாயில்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கித் திரும்பட்டும். வீரன் அழகுமுத்து புகழ் நீடித்து நிலைக்கட்டும்” என்கிறார்.

தெற்கிலிருந்து வரலாறு எழுதப்படும். எழுதிக்கொண்டிருக்கிறது திராவிட மாடல்!

## :.ப்ளாஷ்பேக்





எம்.ஜெ.ராஜன்

### இளைஞர் அணி வலிமைப் பயணம்!

1984-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், இளைஞர் அணியை வலிமைப் படுத்தும் பயணமாக, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு வருகை தந்தார். நாகர்கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் தலைமை உரையாற்றினார். அப்போது வட்டச் செயலாளராக இருந்த நான், கூட்டத்தில் பங்கேற்றேன். திராவிட இயக்கப் பேச்சாளர் நாஞ்சில் சம்பத் அவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்று, உரை வீச்சு வழங்கினார்.

**- எம்.ஜெ.ராஜன்,**
**மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர்,**
**கன்னியாகுமரி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சென்னை துறைமுகத்தில் துப்பாக்கிச் சூடு!

1958-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் துறைமுகத் தொழிலாளர் சம்மேளனம் வேலைநிறுத்தம் அறிவித்தது. அதையொட்டி, சென்னை துறைமுகத்தில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் கழகம் முன் நின்றது. அப்போது, போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்தனர். அதில், வண்ணை கே.எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தின் செயற்குழு உறுப்பினரும், கழகச் செயல்வீரருமான ஏ.சுப்ரமணியமும் ஒருவர். இந்தத் துப்பாக்கிச் சூடு காரணமாக, சென்னை நகரமே கொந்தளித்தது. ‘நம்நாடு’ இதழில், நீண்ட கட்டுரை எழுதி கண்டனம் தெரிவித்திருந்தார், பேரறிஞர் அண்ணா.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

537

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131